4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 569/2019 நாள்: 30.10.2025 வா.சா.1 – அருணகிரி

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலம் புவனேஷ்வரி தாக்கல் செய்துள்ளதாக வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன என்றால் சரிதான். மேற்படி முதல் விசாரணை வாக்குமூலத்தில், மேற்படி வாதியே நேரடியாக அதிலுள்ள சங்கதிகளை சொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வாதியின் பெயரில் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளதால் மேற்படி வாக்குமூலம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இறந்துபோன ராமலிங்கத்தின் உடன்பிறந்தவர்கள் யார் யார் தற்போது உயிருடன் உள்ளார்கள் என்றால் எனது தாயார் புவனேஷ்வரி மட்டும் உயிருடன் உள்ளார். எனது தாயாருடன் பிறந்த பழனிச்சாமி என்பவர் 3 மாதங்களுக்கு முன்பு காலமானார். மேற்படி பழனிச்சாமியை இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான், பழனிச்சாமி வழக்கு சொத்தில் உரிமை கோரமாட்டேன் என்று தெரிவித்ததால் நான் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை. ராமலிங்கத்தினுடைய வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து ராமலிங்கத்திற்கு எவ்வகையில் பாத்தியப்பட்டது என்ற விவரத்தை நான் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி அது பற்றி தெரியாது, ஆனால் அது பூர்வீக சொத்தாகும். தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதை காட்டுவதற்கு மூல ஆவணங்களை நான்

பார்த்தேனா என்றால் சாட்சி மூல ஆவணமான பாகபிரிவினை பத்திரத்தை நான் பார்த்தேன் என்று கூறுகிறார். எப்போது மேற்படி பாகபிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி பாகபிரிவினை ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். இந்த வழக்கு சங்கதிகள் எனது தாயார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் வாதியின் முகவர் என்றும், எனக்கு வழக்கு சங்கதிகள் நேரடியாக தெரியாத காரணத்தினால் நான் சாட்சியம் அளிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.10.30 16:15:01 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.